2010 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் கருத்தம்பட்டி, கனியூர், ஆனைமலை ஆகிய இடங்களில் எல்லாம் கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. வடவள்ளி பகுதி-2, வடவள்ளி பகுதி-1 ஆகிய பகுதிகளில் மட்டும் தலா 5 கடைகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. அதாவது ஒன்று 950 ரூபாய்க்கும் வாடகைக்கு விடப்பட்டு, இன்னொரு கடை அதாவது வடவள்ளி பகுதி-1-ல் உள்ள கடை 850 ரூபாய்க்கும் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு இடங்களில் உள்ள 10 கடைகளில் மட்டும் வாடகை நிலுவைத் தொகை என்பது 8,13,473 ரூபாய் ஆகும். வடவள்ளி பகுதி-1-ல் மட்டும் 2,22,409 ரூபாய் வாடகைத் தொகை நிலுவையில் உள்ளது. மேலும், வடவள்ளி பகுதி 2-ல் மட்டும் ரூபாய் 5 இலட்சத்து 91 ஆயிரத்து 64 ரூபாய் வாடகை நிலுவையிலுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் புதிதாகக் கடைகள் கட்டுவதற்கான வாய்ப்புகள் எழவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

60—

பால் குளிரூட்டும் நிலையம்

***104163—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், ஓ. ஜேடர்பாளையத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2010 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராசிபுரம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், ஓ. ஜேடர்பாளையத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விவசாயிகள் மற்றும் கிராமப்புற ஏழைப் பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் அனைவரும் பால் உற்பத்தி செய்து தங்களுடைய வருவாயைப் பெருக்கிக்கொள்ளக்கூடிய நிலையில் உள்ளார்கள். அதனால்தான் நமது தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் சென்ற ஆண்டு பால் விலையை உயர்த்தித் தந்து அந்த மக்களின் வயிற்றில் பாலை வார்த்துள்ளார்கள். எனவே, எனது தொகுதியிலுள்ள ஜேடர்பாளையத்தில் ஒரு B.M.C.-Bulk Milk Cooling Centre அமைத்துத் தருவதன்மூலம் அதைச் சுற்றியுள்ள இரண்டு, மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்ற சுமார் 15, 16 பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திலே தினந்தோறும் 5 ஆயிரம், 6 ஆயிரம் லிட்டர் அளவிலே பெறப்படுகின்ற பாலை ஓர் இடத்தில் சேமித்துவைத்து, பின்னர் அதை எடுத்துச் செல்வதற்கு வசதி செய்து தந்தால் நன்மையாக இருக்கும். தவிர, பெண்கள் காலையில் 5 மணிக்கே சென்று அந்தப் பாலை சங்கத்திற்கு வழங்க வேண்டிய நிலை உள்ளது. இந்த B.M.C. நிலையம் அமைத்துத் தருவதன்மூலம் அவர்களெல்லாம் காலை 7-00 அல்லது 8-00 மணிக்குச் சென்று பால் வழங்கினால் போதும் என்ற நிலை ஏற்படும் என்ற காரணத்தால் எனது தொகுதியிலுள்ள ஜேடர்பாளையம் மற்றும் ஆலம்பட்டியில் அந்த B.M.C. நிலையம் வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அதற்குண்டான இடங்களும் இருக்கின்றன. நம்முடைய பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்தையும் பார்வையிட்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்த ஆண்டு அந்த நிலையத்தை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால் அதற்காக 4 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. சுமார் 5 கோடி ரூபாய். அளவிற்கு நிதி தேவைப்படுகிறது. அதோடுமட்டுமல்லாமல், சுற்று வட்டாரத்தில் 50 ஆயிரம் லிட்டர் வரை பால் தேவைப்படுகிற காரணத்தால்தான், அந்தப் பால் உற்பத்தியாளர்களுடைய நலனைக் கருதி, திராவிட முன்னேற்றக் கழகம் ஐந்தாவது முறையாகத் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே பொறுப்பேற்ற பிறகு, அந்தப் பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு மாற்றாக, மொத்த பால் குளிர்விப்பான்கள் துவக்கப்படக்கூடிய பணியைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம். இந்த ஆட்சி பொறுப்பேற்று 4 ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே 166 பால் பொது குளிர்விப்பான்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய அதுபோன்ற பகுதிகளில் தற்போது 300, 400 லிட்டர் அளவுக்குத்தான் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கு அருகில், 7 கி.மீ. தொலைவிலுள்ள சிங்களாபுரத்தில், பால் மொத்த குளிர்விப்பான் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, பக்கத்து ஊர்களிலுள்ள பால் உற்பத்தியாளர்கள்மூலமாக 2 ஆயிரம் லிட்டர் வரை பால் வருமேயானால், அந்தப் பகுதியில் நிச்சயமாக பால் பொதுக் குளிர்விப்பான் ஒன்று அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தற்போது அந்தச் சுற்று வட்டாரத்தில் இருக்கின்ற 15 பால் உற்பத்தியாளர் சங்கங்களானவை இரண்டு, மூன்று கிலோ மீட்டர் உள்ளடக்கித்தான் இருக்கின்றன. தற்போது கிட்டத்தட்ட 5 ஆயிரம் லிட்டருக்குக் குறைவில்லாமல் அங்கே அந்தப் பகுதியிலே பால் உற்பத்தியாகிறது. ஆகவே, இந்த ஆண்டே அமைத்துத் தருமாறு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவலர்களைக் கொண்டு ஆய்வு செய்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகிற வகையில் பால் உற்பத்தி இருக்குமேயானால் நிச்சயமாக வருகிற ஆண்டில் அதுபோன்ற குளிர்விப்பான் ஒன்று அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அ.தி.மு.க. உறுப்பினர்கள் கேள்வி நேரத்தை ஒத்திவைக்கக்கூடாது என்று குறிப்பாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால் ஒருவரைக்கூட கேள்வி நேரத்தில் காண முடியவில்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல் 4) @

1—

தரம் உயர்த்துதல்

வினா எண் 3399—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை சிறப்பு ஊராட்சியை மக்கள் தொகை அடிப்படையின்மூலம் நகராட்சியாக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பேரூராட்சியின் மக்கள் தொகை 30,000 க்கும் குறைவாக இருப்பதால் தமிழக அரசின் நகராட்சிகள்

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.